This article is published under the Creative Commons CC-BY-ND License (http://creativecommons.org/licenses/

# M. Thalayasingham's literary works and philosophy
# மு. தளையசிங்கத்தின் ஆக்கவிலக்கியமும் மெய்யியலும்

**கலாநிதி தி. செல்வமனோகரன்**
*முதுநிலை விரிவுரையாளர், சைவசித்தாந்தத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*
*Correspondence:* tselvan@univ.jfn.ac.lk
*Submitted: 20.11.2024 Revised: 10.12.2024 Accepted: 13.12.2024*

**Abstract:** Several literatures constantly emerged in past decades. Nevertheless, not all the literatures survive up to the present moment. Incomparably, Silappathikaram is regarded as the surviving literature. It is the foremost of the five great epics in Tamil. The epic was written by the poet Ilango Adigal in 2nd century B.C. It is considered as the treasure trove for delineating the elements of Iyal (poetry), Isai (music), Natakam (drama). Undoubtedly, the intricacies and the techniques of music in Silappathikaram was the great inspiration for the composers of later years. Silappathikaram songs have been widely used in the field of music. Yet, it has not been documented as a whole. The foremost concern of this research is to comprehend the use of Silappathikaram songs as a whole. Therefore, the main objective of this research is to trace the influence and the use of Silappathikaram songs in the field of music. The study utilized exploratory method and the primary data is gathered through the songs which are emerged in the later years. The research reveals that, Silappathikaram songs have been used as film songs, ragamalika (the composition of different ragas) in musical concerts, and dance-drama songs. It has been found that, Navarasa (Nine emotions) songs of Silappathikaram have been researched widely and identified that the punn (the melodic mode used by the Tamil people in their music since ancient times) used in contemporary songs equivalently found in Silappathikaram songs.

**Key words:** Punn, Swara (the sound of musical note), Ragamalika, Mettu (a musical interval)

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதகுல வரலாற்றின் முக்கிய இரு திருப்புமுனைகள் அல்லது பிரதான ஆதி மூல நிகழ்வுகள் கருவிக்கையாட்சியும் மொழிப் பயன்பாடும் ஆகும். மொழியின் வரலாறு, வளர்ச்சி என்பது மனித அறிவுப் பரிமாணத்தின் வெளிப்பாடாகும். ஏனெனில் மொழியே மனிதரின் வீரக்கதைப் பாடல் வரலாற்றை, தகவற் பரிமாற்றத்தை, வாழ்வியலை, நீதி போதனையை, விழுமியங்களின் பரிமாற்றங்களை, சமயத்தை, தத்துவத்தை, பண்பாட்டை என எண்ணற்ற பணிகளைச் செய்தது (ஜெயமோகன், 2003: 43). அந்தப் பணியை செவ்வனே செய்யும் மொழி வடிவமாக இலக்கியம் திகழ்கிறது. எல்லா மொழிகளிலும் இலக்கியத்திற்கென தனியான வரலாறும் தனித்துவமும் எனப் பன்முகப் பெறுமானம் உண்டு.

மனித அறிவுவாதத்தின் அடையாளம் மெய்யியல் எனலாம். மெய்யியல் உண்மையை அறிவதற்கான நாட்டமாக, தேடலாக விளங்கப்படுகிறது. உண்மையென நிரூபிக்கப்பட்ட ஒன்றை, ஐயுறுவதில் இருந்தே மெய்யியல் பிறக்கிறது (கிருஷ்ணராஜா, சோ., 1995:3). அது அறிவு என்றால் என்ன? அது எதனைப் பற்றியது? அது எவ்வண்ணம் பெறப்படுகிறது? என வினாக்களைத் தொடுத்து விடை காண முயல்வதாக விளக்கப்படுகிறது. ஆக, மெய்யியல் என்பது ‘தன்னைப் பற்றிச் சிந்திக்கின்ற சிந்தனை வடிவம்’ என்பதாகும். அந்தவகையில் அது மனிதனால் பூரணமாகப் புரிந்து தன்னுள் கட்டுப்படுத்தத் தக்கதாக இப்பிரபஞ்சத்தை மாற்றுவதற்கு தொடர்ந்து முயலும் முயற்சியாகவும் அம்முயற்சியில் தளர்ந்தவர்கள் அல்லது ஊகவறிவின் வழி பிரபஞ்சத்தை அறிய - கடக்க முயல்பவர்கள் பிரபஞ்சவதீதத்தில் சரணடைவதும் நிகழ்ந்து வருகின்றது.

காலனியகாலத்தில் தமிழுக்கு நவீனத்துவம் அறிமுகமான சூழலின் வழி உருவான அறிவுப் பாரம்பரியத்தின் ஊடான வளர்ச்சி, கருத்துநிலை உருவாக்கத்தின் பேறாக வந்த - சுதந்திர இலங்கையின் தமிழ்ப் புலமையாளர்களில் ஒருவரான மு.தளையசிங்கம்

முன்வைத்த ஆக்க இலக்கியமும் மெய்யியலும் பற்றிய ஆய்வை இந்த ஆய்வுக்கட்டுரை முன்னெடுக்கிறது.

**ஆய்வுப் பிரச்சினை**

இவருடைய ஆக்க இலக்கியக்களுக்கும் இவர் முன்வைத்த மெய்யியலுக்கும் இடையேயான இடைவினைகள், அவற்றின் பொருத்தப்பாடு, கோட்பாட்டின் இலக்கியப் பிரதிபலிப்பு, அவற்றின் சமகாலப் பொருத்தப்பாடு என்பன இங்கே ஆய்வு பிரச்சினையாகக் கொள்ளப்படுகின்றன.

**ஆய்வின் நோக்கம்**

மு.தளையசிங்கத்தின் எழுத்து, சிந்தனை என்பனவற்றின் வல்லமைகளை சமகாலத்தில் வைத்துப் புரிந்து கொள்ளுதல், மதிப்பிடுதல் என்பன ஆய்வின் பிரதான நோக்கமாகும். தளையசிங்கத்தின் ஆக்க இலக்கியங்களை மெய்யுள் ஊடாகப் புரிந்து கொள்வதே துணை நோக்கமாகும்.

**ஆய்வு முறையியல்**

இதற்கு விளக்க முறை, வரலாற்று முறை, ஒப்பீட்டு முறை என்பன ஆய்வு முறைகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

**மு.தளையசிங்கம்**

மு.தளையசிங்கம் புங்குடுதீவில் (20.10.1935 - 02.04.1973) மிகவும் வசதியான குடும்பத்தில் பிறந்தவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ், புவியியல், பொருளியல் ஆகிய பாடங்களைக் கற்று கலைமாணிப் பட்டத்தைப் பெற்றவர். 1957இல் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருக்கும் போது ‘சுதந்திரம்’ என்ற பத்திரிகையில் இவருடைய முதல் சிறுகதையான ‘தியாகம்’ வெளிவந்தது. இளம்வயதிலேயே சிந்தனையாளராகவும் சமூகப்போராளியாகவும் அறியப் பட்டவர். பள்ளி ஆசிரியராக பணியாற்றினார். மார்க்சிய ஈடுபாடுள்ளவராக இருந்த தளையசிங்கம் பின்னர் சர்வோதய இயக்கத்துப் போராளியானார். 1966ல் மு.தளையசிங்கம் தனது ஆன்மிக குருவான ஸ்ரீ நந்தகோபால கிரியை இரத்தினபுரியில் சந்தித்தார். அவரை அது அரவிந்தரை நோக்கிக் கொண்டு சென்றது. அது ‘மெய்யுள்’ எனும் மெய்யியலைத் தந்தது. 1968 இல் தனது சமூகப் பணிகளைப் பரவலாக்கும் கருவியாக அரசியலைப் பிரயோகிக்கும் நோக்கத்தில் குறுகிய கால அரசியற் பிரவேசம் செய்தார். ‘சர்வோதய அரசியல் முன்னணி’ என்ற அமைப்பை உருவாக்கி சமூகசேவையிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர். படைப்பிலும் சரி விமர்சனத்திலும் சரி சாதி குறித்து பேசும்போது எந்தவிதமான பாவனைகளுமில்லாமல் அப்பட்டமாக இதய சுத்தியோடு பேசினார். அதுவே அவரின் மரணத்துக்கும் அடிப்படையாயிற்று. தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக கடுமையாக உழைத்த இவர், புங்குடுதீவு கண்ணகையம்மன் கோவிற் கிணற்றில் தாழ்த்தப்பட்ட மக்கள் நன்னீர் பெறும் பொருட்டு 1971இல் நடத்திய போராட்டத்தின்போது காவற்துறையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டு, பின்னர் நோய்வாய்ப்பட்டு இறந்தார்.

இவரது எழுத்துக்கள், விமர்சனங்கள் ஈழத்து இலக்கியப் புலத்தில் பல சர்ச்சைகளை ஏற்படுத்தியது. பழைய இலக்கணப் பண்டிதர் கூறும் மரபுக்கட்டமைப்பின் மீதும் முற்போக்குவாதிகள் கூறும் கலை, இலக்கிய முறைமை மீதும் காட்டமான விமர்சனங்களை முன்வைத்தார். உயிரோட்டமான இலக்கியத்துக்கு இறுக்கமான மரபுக்கட்டுப்பாடுகள் பாதகமாக அமையும். அது இலக்கியத்தில் தேக்க நிலையை ஏற்படுத்தும் என்கிறார். ஈழத்தில் முதலாளித்துவ, பொதுவுடைமை அமைப்புக்கள் மக்கள் வாழ்வுக்கான எழுச்சிக்குரிய தளங்களாகத் தம்மைக் கட்டி எழுப்ப முற்பட்ட இக்காலகட்டத்தில் தான் இவர் மேலான வாழ்வுக்கான சமூக, பொருளாதார மாற்றங்கள் சத்திய நிலையை நோக்கி நகர்த்தப்பட வேண்டும் என்ற எழுச்சிக் கோஷத்தை முன்வைத்து எழுதினார். ‘மூன்றாவது பக்கம், விமர்சகவிக்கிரகங்கள், இலக்கியத்தில் எஸ்.பொ.வின் போக்கு, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருக்கு எழுதும் விண்ணப்பம் முதலான கட்டுரைகளும் கலைஞனின் தாகம், முற்போக்கு இலக்கியம், ஏழாண்டுகால இலக்கிய வளர்ச்சி. புது யுகம் பிறக்கிறது, போர்ப் பறை, ஒரு தனி வீடு, மெய்யுள், கல்கி புராணம் எனப் பற்பல நூல்களும் இவரது சத்திய அழைப்பின் மாதிரி வடிவங்களாக அமைந்தன.

தளையசிங்கம் இலக்கியத்தில் உள்ளடக்கத்துக்கு முதன்மையளித்ததோடு, படைப்பிலக்கியம் மற்றும் அறிவிலக்கியம் முதலானவற்றில் மொழியாட்சி, அழகியல் என்பன முக்கியமானவை என்பதனை வலியுறுத்தியவர். இலக்கியம் தூயகற்பனாவாதத்தைச் சார்ந்தது என்ற மாயையை உடைத்தவர். மெய்யியலின் எல்லைக்குள் புகுந்து சுயமான கட்டமைப்புக்களை உருவாக்கியவர்.

கருத்தியல் , சமூகம், அழகியல் ஆகியவற்றுக்கு இடையே இணைகோடுகளை போட மறுத்து இலக்கியத்தை பெரிதும் உள்ளுணர்வுகளின் அடிப்படையில் காணமுயன்ற மரபின் தனிச்சக்தியாக இயங்கியவர். அவர் மெய்யியல், அரசியல், அறிவியல் போன்ற துறைகளுடன் உறவின்றி இலக்கியம் தனித்து இயங்க முடியாது என நம்பி விவாதத்தின் வழிநின்று இலக்கியத்தினைப் படைத்தவர். தம் பெரும்பாலான படைப்புக்களையும் அதன் வழி சாத்தியமாக்கியவர்.

**தளையசிங்கத்தின் மெய்யுள் எனும் நவீன மெய்யியல்**

நவீனத்துவக் கல்வியின் வழியேற்பட்ட ஆங்கில மொழி வழியறிவு, நவசிந்தனையாக்கம் என்பன மேலைத்தேய அறிவியல் புலத்தை, கலையியக்கியத்தை, வாழ்வியலைத் தமிழுக்கு இற்றைப்படுத்தியது. மேலைத்தேய முறைமைகளைப் பெற்றுக் கொண்ட கற்றவர்கள் பலர் தம்மை மேலைத்தேயத்தவராகவே பாவனை செய்து வாழத்தலைப்பட்டனர். தம்மடையாளத்தை நீக்கி புதிய மேட்டிமையாளராக அடையாளப்படுத்தினர். குறைந்தபட்சம் மேலைத்தேய சிந்தனை மரபு வழி இயங்குவது, நோக்குவது, ஆங்கிலத்தில் உரையாடுவது என அந்தப் பாவனை இன்றுவரை வளர்ந்து வருகிறது. தளையசிங்கம் இவற்றில் இருந்து வேறுபடுகின்றார்.

மாஓ எவ்வாறு கம்யூனிசச் சிந்தனையை சீன நிலவியலுக்கு ஏற்ப இற்றைப்படுத்திப் பிரயோகித்தாரோ அது போல தளையசிங்கமும் மேலைத்தேய சிந்தனையை தன்னுள் உள்வாங்கி இந்திய - தமிழ் பண்பாட்டுக்குள் பிரயோகிக்க முற்பட்டவராவார். புதிய சிந்தனையுருவாக்கத்தை தமிழிற்குத் தந்த “அசல்” சிந்தனைவாதியாக இவர் அடையாளப்படுத்தப்படுகின்றார் (ஜெயமோகன், 2003:11). குறிப்பாக இந்திய மெய்யியல் மரபில் காலூன்றி நின்று தனது “மெய்யுள்” எனும் கருத்தியலை இவர் முன்வைத்துள்ளார் (தளையசிங்கம், மு., 2002).

எழுபதுகளின் ஆரம்பத்தில் எழுதப்பட்ட இப்புதிய தரிசனம் பொருள்முதல்வாதத்தையும் கருத்துமுதல் வாதத்தையும் இணைத்து அல்லது அவ்வாறான பிரிவினைகளைக் களைந்தும் கடந்தும் ஒருமையை முன்வைப்பதாகும். இது உபநிடத, அத்வைத மரபிலிருந்து அரவிந்தர், கோபாலகிரி வரைக்குமான இந்திய மெய்யியல் பாரம்பரியத்தை உள்வாங்கி ஆதி அத்வைதத்தளத்தில் நின்று பேசுகிறது. இங்கு சங்கரரின் அத்வைதம் முன்வைக்கப்படவில்லை. உபநிடத கால இரண்டற்ற நிலை, ‘அதுவே நீயாகின்றாய்’ என்ற பேர்ஞானம் முன்னிலைப் படுத்தப்படுகிறது. புறவயத்தன்மையான பிரபஞ்சம் ஏற்றுக் கொள்ளப்பட்டு எல்லாம் அதுவே எனும் அகவியல் நிலை - பேதமற்ற பேர்ஞானம் நோக்கி மெய்யுள் யாவற்றையும் நகர்த்துகின்றது.

மெய்யுளின் அடிப்படை மனித இனத்தின் வளர்ச்சி குறித்ததாகும். தளையசிங்கம், பௌதிக தன்மையிலிருந்து உலகு, உயிர்த்துவம் நோக்கி பரிணாமமுற்றமையை முன்னிலைச் செயற்பாடு எனவும் அதிலிருந்து மனம் வளர்ச்சி பெற்றது எனவும் விளக்குகின்றார். அதன் அடுத்த கட்டமாக சட்டம், பேர்மனம் உருவாகியது என்றும் இது ஒரு இயங்கியல் நிலை என்றும் விளக்குகின்றார். அதன் அடிப்படையிலேயே யுகக்கணக்கை முன்வைக்கின்றார். கிருதயுகம், துவாபாரயுகம், திரோதயுகம், கலியுகம் என்பதில் தற்போது கலியுகம் நடைபெறுகின்றது. இனி வருவது கிருதயுகம் என்கின்றார். “கிருதயுகத்தை கேடின்றி நிறுத்த விரதம் நான் கொண்டனன்” என பாரதியும் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யுக பரிணாமவளர்ச்சியில் மனித இருப்பை இந்திய மெய்யியல் தளத்தின் அடிப்படையில் அன்னமயகோசம் (பருப்பொருள்), பிரணாமயோகம் (ஆன்மா), மனோமயகோசம் (மனம்), விஞ்ஞானமயகோசம் (ஆழ்மனம்), ஆனந்தமயகோசம் (பேர்மனம்) எனத் தளைசிங்கம் எடுத்துரைக்கின்றார். ஆதியின் பிரபஞ்சம் சடமாகவே - சடமான பருபொருளாக மட்டுமே இருந்தது. இது மூலப்பொருள்; பின்பு உயிர்ப்பு உருவாயிற்று. அதன் பின்பே மனம் உருவாகியது. மனதின் உருவாக்க வழி மானுட இருப்பு நிரூபணம் செய்யப்பட்டது. இனி ஆழ்மனதை மையமாகக் கொண்ட மானுடம் உருவாகும் என்பது தளையசிங்கத்தின் கருத்தாகும். குறித்த மானுடர்களுக்கே (ஞானியர், அதி மானுடர்) உரியதான இறுதி இருநிலைகளான விஞ்ஞானமய கோசமும் ஆனந்தமய கோசமும் பேதம் அற்று எல்லா மானுடர்களுக்கும் உரியதாகின்றது என்பது அவரின் கருத்துநிலையாகும். இதுவே மெய்நிலை - பேதமற்ற மெய்ஞான நிலை என்கின்றார். இங்கு பொருள் - கருத்து, சரி – பிழை, இருள் - ஒளி என்ற பகுப்பு இல்லை; ஆகவே மெய் முதல்நிலை வரையறைகளைக் கடந்த வரையறைகளை

உருவாக்கும். இதனை தளையசிங்கம் கலையை அழிக்கும் கலை, இலக்கியத்தை அழிக்கும் இலக்கியம் உருவாகும் என விளக்குகின்றார்.

தளையசிங்கத்தின் மெய்யுள் பற்றிய சிந்தனைகள் பல்வேறு அடித்தளங்களில் கட்டி வளர்க்கப்பட்டவை எனக் கூறி பின்வரும் விடயங்கள் முன்வைக்கப்படுகின்றன.

- இந்தியப் பண்பாடு அல்லது இந்துமதம் தந்த தத்துவங்களிலான திழைப்பும் இராமகிருஷ்ணர், அரவிந்தர், காந்தி, நந்த கோபாலகிரி முதலானவர்களின் சிந்தனை வயப்பாடும், தான் சார்ந்த ஆன்மிக இயக்கத்தின் கொள்கை வழி நின்று வாழ்வையும் இலக்கியத்தையும் தரிசித்தல்.
- பொருள் முதல்வாத மறுத்தலிப்பு - மார்க்ஸியத்தை விமர்சித்தல் அல்லது நிராகரித்தல்.
- முற்போக்கு, நற்போக்கு இலக்கிய இயக்கங்களின் போக்குகள் குறித்து எதிர்வினையாற்றல்.
- விஞ்ஞானம், பொருள்முதல்வாதம் என்பவற்றுக்கிடையிலான தொடர்பை நிராகரித்து விஞ்ஞானமும் மெய்ஞானமும் அத்விதமாகிவிட்டதெனல்.
- விஞ்ஞானக் கோட்பாடுகளை ஏற்கனவே சமய ஞானம் நிரூபித்துள்ளது என வாதிடுவதன் வழி சமயங்களில் அடித்தளப் பார்வையையும் விஞ்ஞான மேற்றளப் பார்வையையும் வேறுபடுத்துவதன் வழி வரலாற்று வளர்ச்சி பற்றிய பொருள்சார் நோக்கு நிலையை நிராகரித்தல்.
- இந்திய ஆன்மிக தத்துவங்களின் ஒளியில் பூரண இலக்கியமும் பெருந்தள வாழ்வும் எவ்வாறமைய வேண்டும் என வியாக்கியானம் செய்தல்.

தளையசிங்கம் பண்டித மரபு, முற்போக்கு இலக்கியம், நற்போக்கு இலக்கியம் என்பன பற்றிய தனது கருத்துக்களை விமர்சனத்தை முன்னிறுத்தி அபேத வாதத்தை அடிப்படையாகக் கொண்ட பூர்ண சர்வோதயத்தை முன்வைக்கின்றார். சர்வோதயம் என்பது

- பேரறிவாகவும் ஆனந்தமயமாகவும் அவற்றுக்கு அப்பாற்பட்டதாகவும் உள்ள சத்தியம் ஒன்றுள்ளது.
- அடிப்படையில் அது மாற்றமற்றது. ஆனால் சார்பு நிலையில் நாம ரூபங்களாய் மாற்றத்தைக் காட்டுவது. அந்த மாற்றநிலையை ஏறுபடியான பரிணாமமாகக் கொள்வதே சத்தியத்தை அணுகும் உலக சார்பு நிலைக்குரிய சீரான வழியாகும்.
- அந்த ஏறுபடிப் பரிணாமத்தையும் வசதிக்காகச் சதுர்யுகச்சுழலாகவும் ஒவ்வொரு சுழலையும் ஏறுபடி வளர்ச்சியாகவும் கணிக்கலாம்.
- ஒவ்வொரு யுகத்திலும் யுகத்துக்குட்பட்ட காலப்பிரிவுகளிலும் பிரதேசப் பிரிவுகளிலும் நடைபெறும் பரிணாம வளர்ச்சியில் எகலிய மும்முனை இயக்கமாகக் கணித்துக் கொள்ளலாம்.
- என நான்கு அம்சங்களின் ‘புதுயுகத்துவம் அழுத்தும் நான்கு மறைகளாக இவை இருக்கும்’ எனத் தளையசிங்கம் விளக்குகின்றார். (தளையசிங்கம்., 1970:132-133). இது தனிமனிதன், இனம், தேசம், மனிதகுலம், வட்டாரம், கிராமம், நாடு, நகரம், உலகம், பிரபஞ்சம், சமயம், பொருளாதாரம், விவசாயம், கைத்தொழில், வர்த்தகம், கல்வி, விஞ்ஞானம், கலை, தத்துவம், மொழி ஆகிய எல்லாவற்றிலும் எழுச்சியும் வளர்ச்சியுமாக முன்வைக்கப்படுகின்றது(பொன்னம்பலம்,மு., (பதி), 2006:743).. அவர் முன்வைப்பது பரிபூரண விடுதலை, யாவும் கடந்த பரிபூரண ஆனந்தம் என்பதாகும்.
- **ஆக்கவிலக்கியமும் மெய்யியலும்**
- பெரும்பாலான ஆக்க இலக்கிய கர்த்தாக்கள் தத்தமக்கென குறித்த மெய்யியலை தத்தம் படைப்புக்கான அடித்தளமாக வரித்துக்கொள்கின்றனர். ஈழத்தில் ஐம்பதுகளில் மார்க்ஸியம் இந்த இடத்தைப் பிடித்தது. ஈழத்துப்படைப்பாளிகள் பலர் இடதுசாரி சார்புடையவராகின்றனர். இதன் வழி முற்போக்கிலக்கியம் பேரெழுச்சி பெற்றது. முற்போக்குக்காரர்களுடன் ஏற்பட்ட முரண்பாட்டின் வழி நற்போக்கிலக்கியம் உருவாயிற்று. இடதுசாரித்துவத்தில் ஆதியில் ஈடுபாடு கொண்டிருப்பினும் அதன்

குறைபாடுகளைக் கண்டடைந்து தற்காலச்சூழல் ஈழத்தின் சமூக, அரசியல், பண்பாட்டுத் தேவைக்கேற்ப கலையிலக்கியத்தின் நவீனவுருவாக, தளையசிங்கம் மெய்யுளை முன்வைக்கின்றார். ஒரு படைப்பின் சிறப்பு கலையாக்கத்திறனால் மட்டுமின்றி அப்படைப்பாளி கொண்டிருக்கக் கூடிய மெய்யியலாலும் கட்டமைக்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இதனை விளக்க அகிலனையும் ஜெயகாந்தனையும் ஒப்பிடுகின்றார். (தளையசிங்கம்,1970:225-227). அதேவேளை காலத்துக்குப் பொருந்தாத பிற்போக்குத்தனமான மெய்யியலை வரித்துக் கொள்ளல் வெறும் கற்பனை வாத, பழம் பெருமை பேசவல்லதாக அமையுமேயன்றி சிறந்த கலாசிருஷ்டியாக முடியாது.

- வெறும் கற்பனைவாதம் தற்காலத்துக்குப் பொருந்தாது. அது போல பிரசாரமும் ஒரு கலைப் படைப்பைத்தராது. ஆக்கவிலக்கியம் யதார்த்தமானதாக அமைய வேண்டும். வெறும் பிரசார ஆக்கவிலக்கியத்தை விட ஒரு துண்டுப்பிரசுரமோ அன்றி கட்டுரையோ சிறந்த கலா சிருஷ்டியாகிவிடும் சந்தர்ப்பங்களும் அநேகம் உண்டு. இந்த அடிப்படையில் தளையசிங்கம் 'மெய்யும் உள்ளும் மெய்' படைப்பில்
- "கலை இலக்கியம் சிருஷ்டிப்பவன் தான் செய்யும் தொழிலையே, தன் வாழ்க்கையே கலையாகவும் இலக்கியமாகவும் மாற்றினால் என்ன? ஏதும் எழுத வேண்டும் என்றால் நடைமுறையிலிருக்கும் சமகால சரித்திர விடயங்களையும் தன் சொந்த உண்மையான அனுபவங்களையும் அப்படியே எழுதினால் என்ன? ஓர் அணுவின் இயக்க நிகழ்ச்சியே அத்தனை கலையோடு நடைபெறும் போது தனியாக்க கற்பனை கலந்து நடக்காதனவற்றை 'யதார்த்தமாக' எழுத வேண்டுமா? இனிமேல் உண்மையாக நடப்பவற்றை கலையோடு எழுதுவது தான் இலக்கியம்………அதேபோல் அவன் வாழும் நாட்டிலுள்ள மக்களினதும் தனிப்பபட்டவர்களினும் நல்ல சேவையையும் அதன் வரலாற்றையும் அவற்றுக்கு உதவும் ஆராய்ச்சிகளையுமே கலையாகவும் இலக்கியமாகவும் ஒவ்வொரு எழுத்தாளனும் படைத்து வெளியிடுகின்றான் என வைத்துக்கொள்ளும். ஒரு பத்து வருடங்களுக்குள் ஒரு பெரும் சிந்தனைப் புரட்சியும், கலாசார, அரசியல், பொருளாதார, சமூகப் புரட்சியும் தோன்றிவிடும். உண்மைப்படி வாழவும் உண்மைப்படி சிந்திக்கவும் ஒவ்வொருவரும் முயலும் யுகம் ஒன்று தோன்றிவிடும் வாழ்க்கையே கலையாகவும் தொழுகையாகவும் மாறிப் பரவசமளிக்கும் யுகம்."
- 

(பொன்னம்பலம்,மு.,2006;189)

- என நல்லசிவத்தின் ஊடாக உரையாடுகின்றார். தொழில் முறை, சமயம், தத்துவம் என்பனவே கலை இலக்கியத்தை வளர்த்தன என்பதும் சாதாரண வாழ்வே கலையாகவும் தொழுகையாகவும் மாறும் தறுவாயில் வாழ்க்கையுமற்ற, சமயமுமற்ற இரண்டுக்கெட்ட நிலைக்குரிய தனியான கலை, இலக்கியம் என்ற ஒன்று இருக்க முடியாது என்பதும் அவ்வாறு இருப்பின் அது போலி என்பதும் அவர்தம் வாதமாகும்.
- பண்டைய இந்திய சமயங்களின் வழி மீட்டுருவாக்க செயற்பாட்டாளர்களான விவகானந்தர், அரவிந்தர் வழி நின்று பிரயோக அத்வைத வழி தனது மெய்யியலை - கலை இலக்கிய கருத் துருவாக்கத்தை தளையசிங்கம் முன்வைக்கின்றார். ஆக்க இலக்கியத்தின் பணியென்பது "உண்மையான பரவச விடுதலையைத் தருவது" என்பது அவரது கருத்தாகும். வாழ்க்கை கலையாக மாறும் போது கலை என்ற தனித்த ஒன்று இல்லை; தனித்த இலக்கியம் என்ற ஒன்று இல்லை; எல்லாமே பூரணமாகிவிடும்; கலை, இலக்கியம் பூரண கலை இலக்கியமாகிவிடும். இனி, ஆக்க இலக்கியம் வெறும் பொழுதுபோக்கை நோக்காகக் கொண்டமைய முடியாது; வாழ்வின் ஒரு பகுதியைப் பேசுபவராக படைப்பாளி

இருக்க முடியாது. வாழ்வின் எல்லா அம்சங்களையும் உள்வாங்கிய பரிபூரண அறிவினராக அதனைப் படைப்பவராக, ஆத்மிகர் ஒருவர் தன் மெய்யறிவால் பெறுபவற்றைப் பெற்றவராகத் திகழ்ந்து ஆக்கவிலக்கியத்தைத் தர வேண்டும்.

- இத்தகைய விடயத்தை வெளிப்படுத்துவதே அவரது ''கலைஞனின் தாகம்'' எனும் படைப்பாகும். இது வடிவமற்ற வடிவத்தை அல்லது எல்லாம் கலந்த கலப்புருவத்தைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. இப்பிரதியில் கவிதை, புனைவு, உரையாடல் என்ற மூன்று வடிவங்களையும் கலந்த கலப்புருவாக ஆக்கப்பட்டுள்ளது. ஆயினும் இப்பிரதியை ஜெயமோகன் 'ருசியற்ற கலவை' என்றும் 'ஒரு ஆளுமைப் பிளவு' என்றும் கூறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜெயமோகன்,2003:38). மெய்யியல் என்பது குறித்த காலத்தின் பொதுச் சூழலையும் சமூகத்தின் தேவைகளையும் உணர்ந்து அதன் அனைத்து கூறுகளிலும் வளர்ச்சியைத் தரவல்லதாக இருக்க வேண்டும். இங்கு 'இயங்கியல்' முதன்மை பெறுகின்றது. மனித சிந்தனையைத் தேக்கி வைப்பதாகவோ அன்றிப் பின்னோக்கித் தள்ளுவதாகவோ மெய்யியல் அமையக்கூடாது. இறந்து கொண்டிருக்கும் பெரு மெய்யியலைக் காப்பதை விட பிறக்கத் துடிக்கும் மெய்யியலுக்கு உயிரளிப்பவரே காலத்தின் திசைமானியாகத் திகழும் பாக்கியத்துக்கு உரியவராவர். குறித்த மெய்யியலை ஏற்பவர் வெறும் பிரசாரகராக உற்பத்தியாளராகவன்றி சிறந்த கலாசிருஷ்டியாளராக இருக்கும் பட்சத்திலேயே சிறந்த ஆக்கவிலக்கியத்தை நல்கமுடியும். இரண்டும் இசையாவிடில் படைப்பும் இயந்திரப் பாங்கானதாகி விடும்.
- இன்றைய நவீன விஞ்ஞானமும் பொருள்முதல்வாதமும் (மார்க்ஸியம்) இவற்றின் வழி வந்த அறிவு பற்றிய ஆராய்ச்சியும் மனித சிந்தனையில் புத்துயிர்ப்பளித்திருப்பினும் அவை மனிதரின் மேல் மனத்தளங்களையும் பௌதிக அல்லது புறவயப் பருப்பொருளோடும் நின்றுவிட்டன. மனிதரின் மனதையோ ஆழ்மனதையோ பௌதிகவதீதத்தையோ அல்லது அகவய உள்ளுணர்வையோ தொடவில்லை. அவற்றைத் தொடத்தக்க ஆற்றல் - மாற்றத்தைத் தரக்கூடிய விகசிப்பு பழைய சமய, மெய்யியல் ஞானத்துக்கே உரியது எனக்கூறி அவற்றின் வழி ஆக்கவிலக்கியத்துக்கான மெய்யியலாக மெய்யுளை – மெய்முதல் வாதத்தை முன்வைக்கின்றார்.

சுந்தரராமசாமி இற்றைக்கு இருக்கக்கூடிய எழுத்தாளர்களை தளையசிங்கம் வழி நின்று எடுத்துரைக்கின்றார்.

1. மார்க்சியத்தை ஏற்றுக் கொள்ளும் படைப்பாளிகள்
2. மார்க்சியத்தை மறுத்து அதனை வெல்லக்கூடிய திட்டவட்டமான தத்துவப் பார்வை ஏதுமின்றி தங்கள் உள்ளுணர்வுகளின் உந்துதல்களுக்கும் கலையுருவாக்கம் கொடுப்பவர்கள்
3. கட்டுப்பெட்டிகளும் போலிகளும்
4. வியாபாரிகள்

(தளையசிங்கம், மு., 2002:19) முற்போக்கு எழுத்தாளர்கள் முதற்பிரிவுக்கும் புதுமைப்பித்தன், மௌனி, சி.சு.செல்லப்பா இரண்டாம் அணிக்கும், மூன்றாவது அணிக்கு மு.வரதராசன், பண்டிதமணி.சி. கணபதிப்பிள்ளை போன்றோரும் அகிலன், பார்த்தசாரதி, நான்காமணியின் ஒரு பகுதிக்கும் அண்ணாதுரை, கருணாநிதி போன்றோர் இன்னொருபகுதிக்கும் (போலியுள் போலி) எடுத்துரைக்கப்பட்டுள்ளனர். இரண்டாவது வகையினர் புதுவது சிந்திப்பவர்களாக முதன்மை பெறுதல் குறிப்பிடத்தக்கது.

ஆக மு.தளையசிங்கத்தின் மெய்யியலான மெய்யுள் மெய்முதல் வாதமாக பேர்எதிர்ப்பிலக்கியமாக, பூரண இலக்கியமாக, பெருந்தள வாழ்க்கையைப் பேசுவதாக, பேர்ஞான நிலையாக, பேர் மனிதப் பொதுவுடைமையாக, கூட்டு ஆழ்மனமாக, சமரச - சமாதான கலப்புருவாக சத்திய வழியாக, சத்திய யுகத்திற்கான பூரண சர்வோதயமாக முன்வைக்கப்பட்டுள்ளது. ஆக்க இலக்கியத்தை புது யுகத்திற்கேற்ப மாற்றி நகர்த்தும் இலக்கியக் கலையுருவாக அடையாளப்படுத்தப்படுகின்றது.

அரவிந்தர் முன்வைக்கும் 'பூரண யோகம்' என்ற கருத்தாக்கமே இவரை 'பூரண இலக்கியம்' பற்றிய உரையாடலுக்கு இட்டுச் சென்றுள்ளது. கலை கலைக்காக, கலை மக்களுக்காக என்பது சமயம் சமயத்திற்காக, சமயம் மக்கள் விடுதலைக்காக என்பதை ஒத்தது என்றும் இவை யாவற்றுக்கும் அப்பாலான 'அதுவே' உண்மை என்றும் 'நான்' எனும் உணர்வு அறியாமையை, பேதத்தை நல்குமென்றும் அதனைத் துறத்தலே பேர்மனம் - பெருஞானம் - உண்மையான விடுதலை என்றும் உரையாடுகின்றார். உள்ளுணர்வுக்கே முதன்மையாளிக்கின்றார். பிரபஞ்ச யதார்த்த வாதத்தின் வழி ஆக்க இலக்கியத்தை செழுமைப்படுத்த முனைகிறார். பூரண இலக்கியம் பற்றிய உரையாடலில் அதன் தேவைப்பாடுகள் என்ன எனும் விடயத்தை விளக்கவும் பல்வேறு பிரச்சினைகளால் சஞ்சலத்துக்கு உள்ளாகும் மனிதனை சமநிலைப்படுத்தவும் நல்வழிப்படுத்தவும் இலக்கியம் தேவை. ஆனால் அது மாறாகக் கனவையும் மயக்கத்தையும் தரக்கூடியது. இலக்கியம் ஒருவகை உளவியல் சிகிச்சையாக அமைகிறது. பூரண இலக்கிய வளர்ச்சி சமூகத்தின் சகல துறை வளர்ச்சியாக அமையும் என்பது அவரின் நம்பிக்கையாகும்.

### சமகாலப் போக்குகள்

இன்றைய சமூகம் தொழில்நுட்பத்தின் வழி தனியன்களாகப் பிரிந்து போய்க் கொண்டிருக்கின்றது. மனித மனம் அகண்ட பிரபஞ்சத்துள் தனக்குத் தனக்கென தனியுலகை சிருஷ்டித்து வாழ்கிறது. அச்சூழலில் இவரது கருத்துக்களை இணைத்து பார்க்கலாம்.

- இலக்கிய வடிவத்தின் மாற்றம் தேவை என்ற இவரது கருத்து சரியானது. இன்று பின் நவீனத்துவத்தின் வழி அறிவியல் தேற்றங்கள், அறிக்கைகள், கணிதப்புதிர்கள், வரலாற்றுத் தரவுகளின் ஒழுங்கமைப்பு எனப் பல்வகை 'வடிவமற்ற வடிவங்கள்' காணப்படுகின்றன.
- கற்பனையற்ற, யதார்த்தப்படைப்புகள் பேரிலக்கியத்தின் வழி ஈழத்தில் தோற்றம் பெற்றுள்ளன. அவற்றுள் பல யதார்த்தத்தின் யதார்த்தமாக உள்ளனவெனினும் சிறந்த கலைப்படைப்பாக உள்ளனவா எனின் பெரிதும் இல்லை என்பதே விடையாகும்.
- கட்டவிழ்ப்பு வாதத்தின் வழி புனிதங்களை கட்டவிழ்த்தல் என்பது பேதமற்ற - அபேத ஒருமை வாதத்திற்கான பிரதான வழியாக அமைந்துள்ளது.
- சமூகப் பரிணாமம் என்பது ஏற்படாது 'சமூக ஒடுங்கலே' நிகழ்ந்து வருகின்றது. தனி மனிதனில் தொடங்கி உலகுவரை விரியும் சர்வோதயப்பாதை நிகழவில்லை. மாறாக பிரபஞ்சத்தில் தொடங்கி நான் என்பதில் ஒடுங்கும் 'நான்' களின் காலமாகவே இப்புதிய நூற்றாண்டு அமைந்துள்ளது.
- பேதமற்ற ஒருமையை மு.தளையசிங்கம் கனவு கண்டார். இங்கு முதலாளியத்தின் வெற்றியையும் பொதுவுடமையின் ஒடுக்கத்தையுமே காணமுடிகின்றது. சர்வோதயத்தில் பிரிவினை வாதமே முன்னிலைப்படுத்தப்படுகின்றது.
- ஒற்றைக் கலாசாரம், பிரபஞ்சத்தை உள்ளங்கைக்குள் அடக்குதல் என உலகமயமாதலின் விளைவுகளே இன்று காணப்படுகின்றன. அது சார்ந்த இலக்கியங்கள் பல்கிப் பெருகியுள்ளன. அவை பூரண இலக்கிய வகைக்குள் அடக்க முடியாதவை; பல இலக்கியமாகவே ஏற்றுக்கொள்ள முடியாதவை.
- இன்று உலக அளவில் முதன்மை பெறுவது அடையாளமீட்பு ஆகும். ஒவ்வொரு சிறுபான்மை இனமும் தமக்கேயான தனித்த அடையாளங்களை பேணவும் இலக்கியமாக்கவும் முற்பட்டு உள்ளமை எதிர்த்தள இயங்கியலாகின்றது.

### சில அவதானிப்புகள்

- பூரண இலக்கியத்தை அவாவி மெய்யுள் எனும் புதிய இலக்கிய உருவம், மெய்யிலில் முன்வைக்கப்பட்டது. இன்று மெய்யுள்வாதிகள் காணாமல் போய் உள்ளனர்.

- தளையசிங்கம் முன்வைக்கும் அகவியல் கருத்துக்கள் முதன்மை பெறவில்லை. சமய ஞான ரீதியிலான இவரது கருத்துருவாக்க முறைமையே இதற்குக் காரணம் எனலாம்.
- இவரது பிரபஞ்ச யதார்த்த வாதம் - விஞ்ஞானத்தைப் போல 'பட்டவர்த்தனமான உண்மை' என்பது சம்பவ சித்தரிப்புக்களாக அமைகின்றனவேயன்றி கலாசிருஷ்டிகளாக வெளிவரவில்லை. அறத்தை பிரபஞ்சத்தில் தேடாது சமயத்தில் தேடியமையும் இதன் வீழ்ச்சிக்கு காரணமாய் இருக்கின்றது.
- இன்றைய உலகு, உற்பத்தி உறவுகளையும் சம்பளத்தை மட்டும் அவாவும் தொழிலாளர் களையுமே உற்பத்தி செய்கின்றது. 'தொழில்' கலையெனும் மதிப்பையிழந்து வருகிறது.
- பொருள், கருத்து எனும் பேதம் இன்றும் உயிர் வாழ்வது போலவே 'நான்' எனும் உணர்வும் பெருவாழ்க்கை பெற்று வாழ்கிறது. ஆகவே வாழ்வை கலையாக்குகின்ற - பேதமற்ற ஒன்றுபட்ட அத்வைதம் சாத்தியமற்றே காணப்படுகின்றது.
- கலை இலக்கியம் தரும் அனுபவம் மானுடவிடுதலைக்கான பரவசம் என்பதும் இலட்சிய வாதமாகவே உள்ளது. கலை இலக்கிய அனுபவம் புறவய வழி உணரப்படுகின்றது.
- தளையசிங்கத்தின் யதார்த்தம் தரும் அனுபவத்திலும் 'தேன் - மருந்து' உறவு போல யதார்த்தமும் சிறிது கற்பனையும் கலந்த ஆக்கவிலக்கியமே பேரதிர்வை ஏற்படுத்த வல்லதாயும் சமூக மாற்றத்திற்கானதாகவும் அமைகிறது.

**முடிவுரை**

ஆக்கவிலக்கியத்துக்கும் மெய்யியலுக்குமான உறவு மிகவும் ஆரோக்கியமானதும் அவசியமானதுமாகும். அதேவேளை வெறும் மெய்யியல் உரையாடலோ அல்லது இலக்கியப் பிரசாரமோ, சம்பவக் கோர்வையோ நல்ல இலக்கியமாகி விட முடியாது. தளையசிங்கம் சொல்வது போல இலக்கியம் சமூக மாற்றத்தை தனிமனித வாழ்வியல் மாற்றத்தை தரவல்லதாக ஒருவகை உளவியல் பிரயோகமாக அமைதல் வேண்டும். மெய்யியலை ஆதார சுருதியாகக் கொண்டியங்கும் சூழலில் சமூகத்தின் தேசத்தின் அத்தனை கூறுகளிலும் மாற்றத்தைத்தரும் தளையசிங்கத்தின் மெய்யியல் முன்வைக்கும் இலக்கியத்தை அழிக்கும் இலக்கியம் - வடிவமற்ற வடிவம் அல்லது கலப்புறு வடிவம் அவராலே சாத்தியமாக்கப்பட்டது போல (போர்ப்பறை) நிலாந்தனின் எழுத்துக்களாலும் சாத்தியமாயிற்று. தமிழில் பின்னவீனத்துவ மெய்யியலின் வருகை, கட்டவிழ்ப்பு வாதம், பிரதியாக்கம் என்பன அதனை மேலும் சாத்தியமாக்கியன. அதேவேளை பேர்மனம், பெருந்தள வாழ்க்கை, பேர்ஞானம் என்பவற்றினூடான அத்வைதநிலை சாத்தியமற்ற ஒன்றாகவே இன்றுவரை காணப்படுகின்றது. தமிழின் நவசிந்தனைவாதியான தளையசிங்கம் தன் சொல்லுக்கும் செயலுக்கும் வெளியற்ற படைப்பாளியாக, மெய்யியலாளராக வாழ்ந்திறந்தவர் என்ற வகையில் அவரது மெய்யியலும் ஆக்கவிலக்கிய சிந்தனையையும் தனித்துவமான கருத்தியல் புலங்களாகத் திகழ்கின்றன.

**4. உசாத்துணை நூல்கள்**


1. இராஜேஷ்கண்ணன். இ., 2020. *இலக்கியத்தின் சமூகப் பிரதிபலிப்புகள்.* தூண்டி இலக்கிய வட்டம். யாழ்ப்பாணம்.
2. கிருஷ்ணராஜா. சோ., 1995. *சைவ சித்தாந்த அறிவாராய்ச்சியியல்.* இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம். கொழும்பு.
3. கிருஷ்ணராஜா. சோ., 2011. *மெய்யியல் ஓர் அறிமுகம்.* குமரன் புத்தக இல்லம். கொழும்பு.
4. தளையசிங்கம். மு., 1970. *போர்பறை.* சர்வ மத சங்கம். புங்குடு தீவு.
5. தளையசிங்கம். மு., 2002. *மெய்யுள்.* சந்தியா பதிப்பகம். சென்னை.
6. பொன்னம்பலம். மு., 2006. *மு. தளையசிங்கம் படைப்புகள்.* காலச்சுவடு. சென்னை.

**7.** ஜெயமோகன். 2003. *அமர்தல் அலைதல்.* தமிழினி. சென்னை.

**8.** ஜெயமோகன், 2008, *ஈழ இலக்கியம் ஒரு விமர்சனப் பார்வை*, கிழக்கு பதிப்பகம், சென்னை.